


# 20.09.2026 செய்திகள்

## நாட்டின் மாவட்ட அளவிலான வேலைவாய்ப்பு தரவுகள்

- நாட்டின் முதல் மாவட்ட அளவிலான தொழிலாளர் சந்தை (வேலைவாய்ப்பு) தரவுகளை தேசியப் புள்ளியியல் அலுவலகம் (என்எஸ்ஓ) வெளியிட்டுள்ளது.
- வேலைவாய்ப்புத் தரவுகளைக் குறிக்கும் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் (எம்எஃப்பிஆர்), தொழிலாளர் எண்ணிக்கை விகிதம் (டபிள்யூ.பி.ஆர்), வேலையின்மை விகிதம், கல்வி அல்லது வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்களின் விகிதம் ஆகியவை மாவட்ட அளவில் முதல்முறையாக வெளியிடப்பட்டுள்ளன.
- அதன்படி, குஜராத்தின் சூரத் அதிகபட்ச தொழிலாளர் பங்கேற்பு மற்றும் எண்ணிக்கை விகிதத்தை (முறையே 68.6 சதவீதம் மற்றும் 67.8 சதவீதம்) பதிவு செய்துள்ளது.
- இதற்கு அடுத்தபடியாக பீகாரின் அராரியா, தமிழகத்தின் சேலம் ஆகிய மாவட்டங்கள் உள்ளன.

» பெண்கள் வேலைவாய்ப்பில்.....

- பெண்கள் வேலைவாய்ப்பில் பங்கேற்பதில் மாவட்டங்களுக்கு இடையே கணிசமான வேறுபாடுகள் இருப்பதை தரவுகள் காட்டுகின்றன.
- ஹிமாச்சலின் ஹமீர்பூர் அதிகபட்சமாக 80.9 சதவீத பெண்கள் பங்கேற்பைப் பதிவு செய்துள்ளது.
- ஜம்முகாஷ்மீரின் பட்காம் (71.4 சதவீதம்), ஒடிஸாவின் மயூர் பஞ்ச் (71.8 சதவீதம்), சத்தீஸ்கரின் சுர்குஜா (69 சதவீதம்) ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.
- ஒட்டுமொத்தமாக 57.8 சதவீத மாவட்டங்கள் 40 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட பெண்கள் தொழிலாளர் பங்கேற்பு விகிதத்தைப் பதிவு செய்துள்ளன.

» வேலையின்மை விகிதம்

- சுமார் 43.1 சதவீத மாவட்டங்கள் 0.5 முதல் 3 சதவீத வேலையின்மையையும், 34.7 சதவீத மாவட்டங்கள் 3 முதல் 5.5 சதவீத வேலையின்மையையும் பதிவு செய்துள்ளன.
- 14.9 சதவீத மாவட்டங்களில் மட்டுமே வேலையின்மை 5.5 சதவீதத்துக்கு மேல் உள்ளது.
- மேற்கு வங்கத்தின் தெற்கு 24 பர்கானா, பிகாரின் அராரியா ஆகியவை மிகக் குறைந்த வேலையின்மை விகிதத்தை (0.9 சதவீதம்) பதிவு செய்துள்ளன.
- அதேபோல், வேலைவாய்ப்பு, கல்வி அல்லது பயிற்சியில் இல்லாத 15-29 வயதுடைய இளைஞர்களின் விகிதம், சுமார் 76.2 சதவீத மாவட்டங்களில் 30 சதவீதத்துக்கும் குறைவாகவே பதிவாகியுள்ளது.
- கேரளத்தின் எர்ணாகுளம் 9.6 சதவீதத்துடன் மிகக் குறைந்த விகிதத்தைப் பதிவு செய்துள்ளது. இதற்கு அடுத்தபடியாக தமிழகத்தின் கோவை 14.5 சதவீதத்துடனும், பெங்களூரு நகர்ப்புறம் 15 சதவீதத்துடனும் உள்ளன.

SURESH'

## சுற்றுச்சூழல் பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் இந்தியா

- 2015-ம் ஆண்டில் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் சர்வதேச சுற்றுச்சூழல் மாநாடு நடைபெற்றது. அப்போது சுற்றுச்சூழலை பாதுகாக்க 21 அம்ச திட்டங்களை நிறைவேற்ற உறுதி மேற்கொள்ளப்பட்டது.
- ஜி20 கூட்டமைப்பு நாடுகளில் இந்தியா மட்டுமே இந்த 21 திட்டங்களையும் வெற்றிகரமாக நிறைவேற்றி உள்ளது.
- சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பு நாட்டின் சூரிய மின் உற்பத்தி 2 ஜிகாவாட் ஆக இருந்தது. தற்போது 160 ஜிகாவாட்டாக உயர்ந்துள்ளது.
- இந்தியாவின் சார்பில் சர்வதேச சோலார் கூட்டமைப்பு தொடங்கப்பட்டு இருக்கிறது. நாடு முழுவதும் வீடுகளில் சூரிய மின்சாரத்தை உற்பத்தி செய்ய, "பிஎம் சூர்யா கர்முஃப்த் பிஜிலி யோஜனா" திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுகிறது.
- நாட்டின் முதல் ஹைட்ரஜன் ரயில் சேவை அண்மையில் தொடங்கப்பட்டது. நாடு முழுவதும் வனப் பகுதி படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருகிறது.
- பல்வேறு மாநிலங்களில் புதிதாக 70,000 குளங்கள், ஏரிகள் உருவாக்கப்பட்டு உள்ளன. வேளாண் சாகுபடியில் சொட்டு நீர் பாசன திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.
- "அம்மாவின் பெயரில் ஒரு மரம் நடுவோம்" இயக்கத்தின் மூலம் நாடு முழுவதும் கோடிக்கணக்கான மரக்கன்றுகள் நடப்பட்டு உள்ளன.
- பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சி செய்யப்படுகின்றன. மாட்டுச்சாணம், காய்கனி கழிவுகள் மூலம் எரிவாயு உற்பத்தி செய்யப்படுகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் இந்தியா அசாதாரண முன்னேற்றம் அடைந்திருக்கிறது.

## கிரீன்லாந்தில் வலுப்படுத்தப்படும் அமெரிக்க ராணுவ கட்டமைப்பு

- ஆர்க்டிக் பகுதியில் அமைந்துள்ள கிரீன்லாந்தில் அமெரிக்காவின் ராணுவக் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக டென்மார்க் அரசுடன் முக்கிய ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்தார்.
- டென்மார்க் மற்றும் கிரீன்லாந்தின் தன்னாட்சி உரிமையையும், எல்லை இறையாண்மையையும் முழுமையாக இந்த ஒப்பந்தம் அங்கீகரிப்பதாக குறிப்பிட்டுள்ள பிரதமர், அனைத்துத் தரப்பினரின் நலன்களும் இதில் பாதுகாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.
- எனினும், இந்த ஒப்பந்தம் சட்டபூர்வமாக அமலுக்கு வருவதற்கு டென்மார்க் மற்றும் கிரீன்லாந்து நாடாளுமன்றங்களின் ஒப்புதல் தேவைப்படுகிறது.
- பின்னணி : கனடாவின் வடகிழக்கு கடற்கரையை ஒட்டியுள்ள கிரீன்லாந்தின் பெரும்பகுதி ஆர்க்டிக் வட்டத்துக்குள் அமைந்துள்ளதால், 2-ஆம் உலகப் போர்க்காலம் முதல் வட அமெரிக்காவின் பாதுகாப்பில் இது மிக முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகத் திகழ்கிறது.
- 2-ஆவது முறையாக அதிபர் பொறுப்பேற்றது முதலே கிரீன்லாந்தை அமெரிக்காவுக்கு விற்பனை செய்ய வேண்டும் என்று டென்மார்க்கை டிரம்ப் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.
- நட்பு நாடாக இருந்தபோதிலும், தேவைப்பட்டால் ராணுவ பலத்தைப் பயன்படுத்தவும் தயங்கமாட்டோம் என அவர் விடுத்த மிரட்டல்கள், சர்வதேச அளவில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தின.
- கிரீன்லாந்து விற்பனைக்கு அல்ல என்று டென்மார்க்கும், கிரீன்லாந்தும் தொடர்ந்து திட்டவட்டமாக மறுத்து வந்த சூழலில், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள இந்த உடன்பாட்டின் மூலம் மேற்கத்திய நாடுகளுக்குள் நிலவி வந்த ராஜீய நெருக்கடி முடிவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுகிறது.
- அதேபோல் இந்த உடன்படிக்கையின்படி, நேட்டோ அமைப்பைச் சாராத பிற நாடுகள் கிரீன்லாந்தில் ராணுவத் தளங்கள் அமைப்பதற்கும், அங்கு முதலீடுகள் செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

SURESH'